7. எந்த மாணவருக்கும் புத்தகம் பெற்ற நாளில் இருந்து 14 நாட்களுக்கு அதிகமாக புத்தகங்களைத் தன்னிடம் வைத்துக் கொள்ள உரிமையில்லை. அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேலாக புத்தகங்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும், விடுமுறை நாட்கள் உட்பட நாள் ஒன்றுக்கு ரூ. 1/- வீதம் அபராதம் விதிக்கப்படும். புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்கக் காலந்தாழ்த்திவிட்ட மாணவர்கள் அபராதத்தொகையை அலுவலகத்தில் செலுத்தி அபராத இரசீதுடன் நூலகரிடம் கொடுக்க வேண்டும். அதுவரை மாணவர்கள் நூலகத்தில் சலுகை பெறமுடியாது.

8. நூலகப் புத்தகங்களைத் தன்பெயரில் எடுத்து மற்றவர்களுக்கு இரவலாகக் கொடுக்கக்கூடாது.

9. புத்தங்கள் பெறும்போது மாணவர்கள் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து வாங்கவேண்டும். ஏதாவது குறை இருந்தால் புத்தகம் வழங்கும் எழுத்தரிடம் முறையிட வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் பிறகு அக்குறை கண்டுபிடிக்கப் பட்டால் அம்மாணவர்களே அந்தக் குறைக்குப் பொறுப்பாவார்கள்.

10. புத்தங்களை அதனுடன் கூடிய சீட்டுடன் உள்ள விபரங்களான வகுப்பு, பதிவு எண், மாணவர் பெயர், புத்தக எண்ணுடன் திருப்பித்தர வேண்டும்.

11. புத்தகம் காணாமல் போனால் அல்லது சேதம் ஏற்பட்டால் அதை வாங்கிய மாணவர் புதுப் புத்தகத்தை வாங்கி நூலகத்திற்குத் தர வேண்டும்.

12. (அ) புத்தகங்களிலும், பத்திரிக்கைகளிலும் எந்த விதமான அடிகோடிட்டுக் காட்டவோ, அதன்மேல் எழுதவோ கூடாது. புத்தகங்களைக் கிழிக்கவோ, சேதப்படுத்தவோ கூடாது.

(ஆ) புத்தகச் சீட்டுகளைக் கிழிக்கவோ அல்லது சிதைக்கவோ கூடாது. எந்தவித பாதிப்போ மண்கறையோ புத்தகச் சீட்டுகளுக்கு ஏற்பட்டால் அதற்குரிய அபராதம் விதிக்கப்படும்.

13. நூலகர்பட்டியல் தயாரிக்கப்படும் பொருட்டு அல்லது வேறு சில காரணங்களுக்காகப் புத்தகங்களை எந்த நேரத்திலும் காலவரையறை முடியும் முன் திருப்பிக் கேட்கலாம்.

14. நூலகர் சில சமயங்களில் குறிப்பிட்ட புத்தகங்களைக் குறிப்புப் புத்தகங்களாக ஒதுக்கலாம். அடையாள அட்டைக்குப் பதிலாக வாங்கும் புத்தகம் அல்லது பத்திரிக்கைகளை நூலகத்திற்கு வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

15. பத்திரிக்கைகளை அதற்கான மேசைகளில் இருந்து எடுக்கக்கூடாது. நூலகத்தின் உள்ளே படிக்க அனுமதி உண்டு பத்திரிக்கைகளை கத்தரிக்கவோ வேறு ஏதாவது நூலகச் சொத்துக்கு கெடுதல் விளைவிக்கவோ கூடாது.

16. அபராதம் உட்பட அனைத்து கட்டணங்களையும் கல்லூரி அலுவலகத்தில் செலுத்தி அதற்கான இரசீதை நூலகரிடம் காட்டி நூலக அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

17. நூலகத்தில் கண்டிப்பாக அமைதியைக் கடைபிடிக்க வேண்டும். அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் நூலகரால் வெளியேற்றப்படுவார்கள்.

18. தமிழ், ஆங்கிலப் புதினங்கள், கதைகள் விடுமுறை காலங்களில் மட்டும் வழங்கப்படும்.

## அடையாள அட்டை

1. ஒவ்வொரு மாணவருக்கும் கல்லூரியில் சேரும் போது அம்மாணவரின் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் போது அதில் உள்ள விபரங்களைச் சரிபார்த்து, தவறுகள் ஏதும் இருந்தால் உடனடியாக அலுவலகத்தில் தெரிவித்து சரி செய்து கொள்ள வேண்டும்.



2. அடையாள அட்டையைக் கல்லூரியால், நடத்தப்பெறும். அனைத்துத் தேர்வுகள் எழுதும் பொழுதும், நூலகத்திலிருந்து நூல்களைப் பெறும் பொழுதும் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும். பணவிடை போன்ற அஞ்சல் துறை தொடர்பானவற்றிற்கும், கல்வி உதவிப்பணம் பெறும்பொழுதும் மாணவரை உறுதிப்படுத்த அடையாள அட்டை இன்றியமையாததாகும். அடையாள அட்டை இல்லாதவர்கள் நூலகத்தில் நூல்களைப் பெறுவதற்கும் தேர்வு எழுதுவதற்கும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3. அடையாள அட்டையை இழந்துவிட்ட மாணவர்கள், முதல்வருக்கு எழுத்து மூலம் தெரிவித்து, கல்லூரி அலுவலகத்தில் ரூ.50/- செலுத்தி மாற்று அடையாள அட்டை பெற வேண்டும். அடையாள அட்டை இல்லாதவர்கள் கல்லூரிக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## கல்லூரிச் சான்றிதழ்கள்

1. படித்து முடித்த மாணவர்கள் கோரும் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் பதிவு எண், கல்வி பெற்ற காலத்துடன் வரவேண்டும். அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்றால் சுயமுகவரி எழுதப்பட்ட அஞ்சல் உறையுடன் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

2. பொதுவாக 3 நாட்கள் முன்னதாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

3. தேர்ச்சி பெற்றதற்கான அல்லது தகுதி பெற்றதற்கான சான்றிதழ்கள் பல்கலைக் கழகத்திலிருந்து மட்டுமே பெற வேண்டும்.

## சான்றிதழ்கள் கட்டணம்

1. கல்லூரியை விட்டு விலகிச் செல்லும் மாணவர்கள் மாற்றுச் சான்றிதழ் பெற ரூபாய் 100/- கட்டணம் செலுத்த வேண்டும்.

2. நன்னடத்தைச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-

3. வயதுச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-

4. மாற்றுச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-

5. சான்றிதழ் பிரதிகள் பெற ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் 10/-

6. உறுதித்தொழிச் சான்றிதது பெற ரூபாய் 10/-

கல்லூரியிலிருந்து விலகி 3 ஆண்டிற்குப் பிறகு விண்ணப்பித்தால் கூடுதல் கட்டணமாக ரூபாய் 10/- செலுத்த வேண்டும்.

## IX. கல்வி உதவித் தொகைகள்

1. மாநில அரசு கல்வி உதவித்தொகை பின்தாங்கிய, மிகவும் பின்தாங்கிய, சீர்மரபினர் மாணவர்களுக்கு வழங்குகிறது. அவர்களின் பெற்றோர் பாதுகாவலர்களுடைய ஆண்டு வருமானம் ரூ. 50,000/- க்குள் இருக்க வேண்டும்.

(அ) மிகவும் பின்தங்கிய, சீர் மரபினர் மாணவர்களின் பெற்றோர் வருமானம் ரூ.50,000/- க்கு மேல் இருந்தாலும் அவர்களுக்கும் படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், ஆய்வுக் கட்டணம், புத்தகக் கட்டணம் முதலியவை வழங்கப்படும்.

(ஆ) அரசு ஆணை (நிலை) எண். 82 நாள் 26.04.90-ல் பிற்பட்டோர் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு இளங்கலை பட்டப்படிப்பு வரையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும்



பிற கட்டாயக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்து இலவசக் கல்வி வழங்கப்படும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவரின் பெற்றோர் அல்லது உடன்பிறப்புகள் அந்தக் குடும்பத்தில் இதுவரையில் யாரும் பல்கலைக்கழகப் பட்டம் பெறாதவர்களாக இருக்க வேண்டும்.

(இ) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 50, 000/- அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(ஈ) சலுகை பெறுபவர் அந்தக் குடும்பத்தைச் சார்ந்த இளங்கலைப் பட்டப்படிப்புப் பயில இருக்கும் முதல் மாணவி, மாணவியராக இருக்க வேண்டும்.

2. மத்திய அரசுக் கல்வி உதவித்தொகை இந்து தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. முழுக்கல்வி உதவித்தொகை பெற அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/- க்குள் இருக்க வேண்டும்.

3. கிறித்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் மாணவர்கள் மாநில அரசின் உதவித் தொகை பெறத் தகுதியுள்ளவர்கள். அவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/- க்கும் குறைவாக இருக்க வேண்டும்

மாநில, மத்திய அரசுகளின் கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் மாணவர்கள் (ஆதித்திராவிட, பழங்குடி, மதம் மாறிய ஆதித்திராவிடர், சீர்மரபினர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர்) முந்தைய ஆண்டில் வேலை நாட்களில் 75% அல்லது அதற்கு மேலாக வருகைதந்திருக்க வேண்டும்.

**4. ஆதி திராவிடர்களுக்கான மானிய, கல்வி உதவித்தொகை**

கல்லூரி விடுதியில் தங்கிப்படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் சமுதாய (கிறித்துவ மதம் மாறியவர்கள் உட்பட) மாணவர்கள் இந்த மானிய கல்வி உதவித் தொகைக்குத் தகுதியானவர்கள் ஆவார்கள். பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்குள் இருக்க வேண்டும்.

**5. தேசிய தகுதி உதவித்தொகை மைய அரசுத் திட்டம்**

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தேசியத் தகுதி உதவித்தொகைகள் இம்மாநிலத்தைச் சேர்ந்த 11வது, 12வது பட்டப்படிப்பு, தொழிற்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இதற்குப் பள்ளி இறுதித்தேர்வு, 12வது பட்டப்படிப்புத் தேர்வுக்கான முடிவுகள் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாணவர்களின் மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு நடத்தும் அமைப்புகளிடம் இருந்து பெறப்படுகிறது. மாணவர்களின் பெற்றோர்கள் அரசு விதிக்கும் வருமான நிபந்தனையைப் பூர்த்தி செய்திருந்தால் அம்மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் உதவித் தொகை கிடைக்கும். பெற்றோர்கள் வருமான நிபந்தனையைப் பூர்த்தி செய்யாவிடில் அம்மாணவர்கள் வேறு ஏதும் உதவித் தொகை பெறாதிருப்பின் ரூ. 100/- பரிசுத் தொகையும், தகுதிச் (மெரிட்) சான்றிதழும் கொடுக்கப்படும். வருமான வரம்பு 30% கழிப்பு அல்லது ரூ.10,000/- நீங்கலாக ஆண்டு வருமானம் ரூ. 25,000/-.



**6. பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநில கல்வி உதவித்தொகை**

பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் செய்தித்தாள்கள் மூலம் பிரசுரிக்கப்படும். தருவிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஒன்று சேர்த்துத் தகுதி அடிப்படையில் பட்டியல் தயார் செய்யப்படும. ஒரு குறிப்பிட்ட அளவான கல்வி உதவித் தொகை 11-ம் வகுப்பிலிருந்து தொழிற்பயிற்சிக் கல்வி வரை வழங்கப்படும்.

**7. மாநில தகுதி கல்வி உதவித்தொகை திட்டம்**

பத்தாவது, மெட்ரிக்குலேஷன் AISLE, CBSE, AISSE தேர்வுகளில் முதன்மையாக வரும் மாணவர்களுக்கு இந்தக் கல்வி உதவித்தொகை பெற்றோர்கள் வருமானத்தைக் கருத்தில் கொள்ளாது வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித் தொகை 11-ம் வகுப்பிலிருந்து தொழிற்பயிற்சிக் கல்வி படிக்கும் வரை கிடைக்கும்.

**8. சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை**

இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு மூன்று மாதம் சிறை சென்றவர்களின் குழந்தைகள் இந்தக் கல்வி உதவித் தொகையைப் பெறத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள். இதைத் தவிர கல்லூரி, தொழிற்பயிற்சிக் கல்விக்கான கட்டணச் சலுகைக்கும் தகுதியாவார்கள்.

**9. முன்னாள் இராணுவத்தினர் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை**

இராணுவத்தில் பணிபுரிகின்றவர்களைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்காகவும். முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகளுக்காகவும் இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். கட்டணச் சலுகை விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை.

**10. <u>இலங்கையில் இருந்து வந்த அகதிகள் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை</u>**

கல்லூரி பட்ட வகுப்புகளில் பயிலும் இலங்கை அகதிகள் குழந்தைகளுக்காக இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். கட்டணச் சலுகை, உதவித்தொகை சில விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவை.

**11. <u>தேசிய கடன் கல்வி உதவித்தொகை</u>**

வருமானம் தகுதி அடிப்படையில் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.25,000/- க்கு மேல் இருக்கக்கூடாது. இதற்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு ஆண்டு முதன்மையான செய்தித்தாள்கள் மூலம் பிரசுரிக்கப்படும்.

**12. <u>உடனடி தகுதி மான்யக் கல்வி உதவித் தொகை</u>**

ரூ.300/- உதவித்தொகை தாழ்த்தப்பட்ட மலைவாழ், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த, ஒரே முயற்சியில் மேல்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு முதல் ஆண்டில் கிடைக்கும். அதற்கு வருமான வரம்பு மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியமும் இல்லை.

**13. <u>தமிழ்நாடு கல்வி அறக்கட்டளை உதவித் தொகை</u>**

எந்தவொரு கல்வித் உதவித் தொகையும் பெறாத மாணவ மற்றும் மாணவிகள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு மிகாமல் இருந்தால் இளங்கலைப் பட்டம் பயில்பவர்கள் மற்றும் முதுகலை பட்டம் பயில்பவர்கள் முதல்வர் மூலம் விண்ணப்பித்து இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.



**14. <u>மத்திய அரசின் சிறுபான்மையினருக்கான கல்வி உதவித்தொகை</u>**

கிறித்துவ, இஸ்லாமிய, பௌத்த, பாரசீக மற்றும் சீக்கிய மதத்தைச் சார்ந்த மாணவ மற்றும் மாணவிகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/- க்கு மிகாமல் இருந்தால் இந்த உதவித் தொகையை இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் பெறலாம்.

**15. <u>மாநில கல்லூரி உதவித்தொகை</u>**

இந்தத் தலைப்பின் கீழ் பின்வரும் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது.

1. பொது
2. முதுநிலை
3. சிறப்பு மொழிக்கல்வி உதவித்தொகை (தமிழ், தெலுங்கு)
4. முஸ்லீம்களுக்கானச் சிறப்பு கல்வி உதவித்தொகை.
5. விதவைகளுக்குச் சிறப்பு உதவித் தொகை.
6. லேடி வில்லிங்டன் பயிற்சிக் கல்லூரியின் சிறப்பு உதவித் தொகை.
7. கிழக்காசிய மொழி பயில்பவர்களுக்குச் சிறப்பு உதவித் தொகை.
8. இராணி மேரி கல்லூரியின் சிறப்பு உதவித்தொகை.
9. ஆங்கிலேய இந்தியர்களுக்குச் சிறப்பு உதவித் தொகை.

எந்தக் கல்வி உதவித்தொகையும் பெறாத மாணவர்கள் தகுதி உள்ள ஏதாவது ஒரு கல்வி உதவித் தொகைக்காக கல்லூரி முதல்வர் மூலம் விண்ணப்பிக்கலாம். அவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குக் கீழாக இருக்க வேண்டும். ஆண்டுக்கு ரூ. 270/- உதவித்தொகையாகக் கிடைக்கும். வரிசை எண் (6)க்கு அதற்காக ரூ.135/- கிடைக்கும்.

16. <u>பட்டமேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கான சிறப்பு கல்வி உதவித்தொகை</u>

அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான படிப்பு உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் முதுநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாது படிப்பு உதவித்தொகை அளித்திட அரசு அனுமதி அளித்துள்ளது. 1995 மே அதற்குப் பிறகு நடைபெற்ற இளநிலை பட்டவகுப்புத் தேர்வுகளில் 60% க்குக் குறையாமல் மதிப்பெண் பெற்றவர்கள் இவ்வுதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர்.

மேற்கண்ட உதவித்தொகைக்களுக்குரிய விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகம் அறிவிக்கும் இறுதி நாளுக்குள் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கல்லூரி அலுவலகம் குறிப்பிடும் இறுதி நாளுக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எத்தகைய காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

1 <u>சலுகைகள்/நிதி உதவிகள்</u>

**மாணவர் பெறும் அரசுச் சலுகைகளும் இதர உதவித் தொகைகளும்**

**(A) தமிழ்நாடு கல்விச் சட்டம் 92ன் கீழ் உள்ள சலுகை**

தமிழ்நாடு கல்விச்சட்டத்தின் கீழ் சில குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் முழுக்கட்டணச் சலுகை அல்லது அரைக்கட்டணச் சலுகை பெறத் தகுதி உடையவர் ஆவார். இது பற்றிய முழு விவரமும் கல்லூரி அலுவலகத்தில் கிடைக்கும்.

இச்சலுகைகள் சட்ட வரம்பிற்கு உட்பட்டு வழங்கப்படும். மாணவர்கள் இச்சலுகைக்கான விண்ணப்பத்தை ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு முதல் தேதிக்குள் கொடுக்க வேண்டும். அதற்கான விண்ணப்பம் கல்லூரி அலுவலகத்தில் கிடைக்கும்.



உதவித் தொகை மற்றும் சலுகைகள் குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இவர்கள் கடந்த கல்வி ஆண்டில் 90% வருகைப் பதிவு பெற்றிருக்க வேண்டும். புதிதாகச் சேரும் மாணவர்கள் இறுதியாகப் படித்த கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து பெறப்பட்ட வருகைப் பதிவுச் சான்றிதழ் தர வேண்டும்.

## X. கல்லூரி மாணவர் பேரவை அமைப்பு

### விதிமுறைகள்

இந்த அமைப்பு 'நேரு நினைவுக் கல்லூரி மாணவர் பேரவை' என அழைக்கப்படும்.

<u>1. குறிக்கோள்கள்</u>

அ. மாணவர்களிடையே பண்பாடு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மற்றும் தனித்திறமைகள் முதலியவற்றை வளர்த்தல்.

ஆ. நவீன அறிவியல், தொழில்நுட்பம் முதலியவற்றில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் கூட்டங்கள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், விவாத மேடைகள் பேச்சுப் போட்டிகள், வினாடிவினா நிகழ்ச்சிகள் முதலியவற்றை நிகழ்த்துதல்.

இ. மக்களாட்சியின் மகத்துவத்தினை உணரவும், மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் முடிவுகள் எடுத்துச் செயல்படவும் பயிற்சி அளித்தல்.

<u>2. கல்லூரிப் பேரவையின் சார்பு மன்றங்கள்</u>

**(Constituents of the College Union)**

i. இலக்கிய மன்றம்

ii. இயற்பியல் துறை மன்றம் (இளநிலை)

iii. இயற்பியல் துறை மன்றம் (முதுநிலை)

iv. கணிதத் துறை மன்றம்

v. கணினி அறிவியல் துறை மன்றம்

vi. பொருளியல் துறை மன்றம்

vii. வணிகவியல் துறை மன்றம்

viii. விலங்கியல் துறை மன்றம்

ix. வேதியியல் துறை மன்றம்.

## 3. பேரவை நிர்வாகிகள்

அ. கல்லூரிப் பேரவையின் அனைத்து அமைப்புகளுக்கும் கல்லூரி முதல்வர் அலுவலக சார்பான முறையில் தலைவர் (Ex - Offcio President) ஆவார்.

ஆ. ஒவ்வொரு துறை மன்றத்திற்கும் அந்த துறையின் ஆசிரியர் ஒருவரைத் துணைத் தலைவராக முதல்வர் நியமிப்பார்.

இ. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மூன்று மாணவர்கள் பேரவை உறுப்பினர்களாக அந்தந்த வகுப்பு மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஈ. மாணவர் பேரவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

உ. மாணவர் பேரவைச் செயலர் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஊ. ஒவ்வொரு துறை மன்றத்தின் செயலரும் தொடர்புடைய துறையின் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

## 4. பேரவைத் தேர்தல் விதிமுறைகள்

அ. கல்லூரித் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல், எழுதாமல் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களில் நிலுவை வைத்திருக்கும்





மாணவர்கள் பேரவைத் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் ஆவர்.

ஆ. அரசியல் கட்சிகளில் ஏதாவது ஒன்றில் உறுப்பினராக இருக்கும் மாணவர், அரசியல் கட்சிகளில் நேரடியாக ஆர்வம் காட்டும் மாணவர் அல்லது ஆதரவு தரும் மாணவர் பேரவைத் தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ தகுதியற்றவர் ஆவார்.

இ. குற்றவியல் நீதிமன்றங்களில் தண்டனை பெற்ற மாணவர்கள், தீர்க்கப்படாத வழக்குகளில் தொடர்புடைய மாணவர்கள் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் ஆவர்.

ஈ. சாதி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயல்படுபவர் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் ஆவர்.

உ. அரசின் விதிமுறைகளை மீறுவோரும், ஒழுங்கு நடவடிக்கைகளின் கீழ் தண்டனை பெற்றோரும் கல்லூரியில், விடுதிகளில் கட்டண நிலுவை வைத்திருப்போரும் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் ஆவர்.

ஊ. பேரவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுவோர் சமர்ப்பிக்கும் வேட்பு மனுக்களில் ஒரு மாணவர் ஒருவரை மட்டுமே முன்மொழியலாம் அல்லது வழிமொழியலாம். ஒரு மாணவர் ஒருவருக்கு முன்மொழிந்து மற்றொருவரையும் வழிமொழிவாரானால் அவர் முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த இரு மனுக்களும் செல்லாதவையெனத் தள்ளுபடி செய்யப்படும்.

எ. பேரவை நிர்வாகிகள் தேர்தலில் போட்டியிடுவோர் சமர்ப்பிக்கும் வேட்பு மனுக்களில் ஒரு பேரவை உறுப்பினர் ஒரு பதவிக்கு ஒருவரை மட்டுமே முன்மொழியலாம் அல்லது வழிமொழியலாம். ஒரு பேரவை உறுப்பினர் ஒரே பதவிக்குப் போட்டியிடும் இருவரில் ஒருவரை முன்மொழிந்து

மற்றொருவரையும் வழிமொழிவாரானால், அவர் முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த இரு வேட்பு மனுக்களும் செல்லாதவை எனத் தள்ளுபடி செய்யப்படும்.

ஏ. பேரவை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுவோர், தாம் போட்டியிடும் அதே பதவிக்குப் போட்டியிடும் வேறு ஒருவரை முன்மொழியவோ, வழிமொழியவோ கூடாது. அவ்வாறு முன்மொழிந்தாலோ, வழிமொழிந்தாலோ, முன்மொழிந்தவர் அல்லது வழிமொழிந்தவரின் வேட்பு மனு செல்லாதவை எனத் தள்ளுபடி செய்யப்படும்.

**5. பொதுவானவை**

அ. ஒரு பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர் இருவர் சமமான எண்ணிக்கையில் வாக்கினைப் பெற்றிருந்தால் சீட்டுக் குலுக்கல் அடிப்படையில் வெற்றி நிர்ணயிக்கப்படும்.

ஆ. மாணவர் பேரவைத் தலைவர், செயலர் இதர மன்றங்களின் செயலர்கள், பேரவை உறுப்பினர்கள் பதவிக்காலம் ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியில் முடிவடையும்.

இ. மாணவர் பேரவைப் பொறுப்பாளர்கள் கல்வியாண்டின் இடையில் விலகினாலோ அல்லது விலக்கப்பட்டாலோ அந்தப் பொறுப்பிற்குத் தகுதியுடைய வேறு ஒரு மாணவரை முதல்வர் நியமிப்பார்.

**6. மாணவர் பேரவைச் செயல்பாடு**

i. மாணவர் பேரவை தனிப்பட்ட மாணவர் ஒருவரின் விருப்பப்படி அல்லாமல் மக்களாட்சி அடிப்படையில் மாணவர்களின் நலன், முன்னேற்றம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு செயல்படும்.

ii.ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் அல்லது இரண்டாவது வாரத்தில் கல்லூரி வேலைநாளில் முதல்வரின் அனுமதியின்



பேரில் முதல்வர் முன்னிலையில், அல்லது முதல்வரால் நியமிக்கப்படும் ஆசிரியர் முன்னிலையில் பேரவைச் செயலர் மாணவர் பேரவைக் கூட்டத்தைக் கூட்டுவார். பேரவைக் கூட்டத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பே தெளிவாகக் கூட்டம் பற்றிய தகவல் பேரவை உறுப்பினர்களுக்கும் பொறுப்பாளர் களுக்கும் பேரவைச் செயலரால் தெரிவிக்கப்பட வேண்டும்.

iii. கால அவகாசம் அளிக்காமல் அவசரக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முதல்வருக்கு அதிகாரம் உண்டு.

iv. கூட்டத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் அளிக்கும் வாக்கின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படும்.

v. பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாணவர் பேரவைத் தலைவர், செயலர் மற்றும் இதர பொறுப்பாளர்கள் செயல்படுவர்.

vi. கல்லூரி மாணவர் பேரவை தொடர்பான செலவினங்கள் பற்றிய விவரங்கள் பேரவையில் விவாதிக்கப்பெற்று அதன் ஒப்புதல் பெற்ற பின்னரே தொடர்புடைய பொறுப்பாளர்கள் மேற்குறித்த செலவினங்களை மேற்கொள்வர். அவ்வாறு செலவு செய்த பின்னர் அடுத்த வரும் பேரவைக் கூட்டத்தில் கணக்குகள் பேரவையின் ஒப்புதலுக்கு வைக்கப்படும். பேரவையின் ஒப்புதல் பெற்ற செலவினங்களையே முதல்வர் ஏற்றுக் கொள்வார்.

vii. மாணவர்களின் பொதுவான பிரச்சனைகளைக் கல்லூரிப் பேரவை விவாதித்து முடிவெடுத்து முதல்வருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

viii. சாதி, மதம் அரசியல் தொடர்பானவற்றை மாணவர் பேரவையில் விவாதிக்கக் கூடாது. அது தொடர்பான கோரிக்கையையும் முன்வைக்கக் கூடாது.

ix. மாணவர் பேரவைப் பொறுப்பளர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி முதல்வருக்கு எழுத்துமூலம்

தெரிவிக்கவேண்டும். முன்னறிவிப்பின்றி போதிய அவகாசம் அளிக்காமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுதல், ஈடுபடத் தூண்டுதல், வகுப்புகளைப் புறக்கணித்தல், புறக்கணிக்கத் தூண்டுதல், குற்றமாகும்.

X. கல்லூரிப் பேரவை மற்றும் அதனைச் சார்ந்த மன்றங்கள் செயல்பட முடியாத, முடிவெடுக்க முடியாத சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் காரணமாகச் செயல்பாட்டில் தேக்க நிலை ஏற்பட்டால் முதல்வரின் முடிவே இறுதியானதாகும்.

XI. கல்லூரிப்பேரவை மற்றும் இதர மன்றங்களின் செயல்பாடுகள், கல்லூரியின் அமைதிக்கும், மாணவர்கள் கல்வி முன்னேற்றத்திற்கும், தடையாக இருப்பதாக முதல்வர் கருதினால், கல்லூரிப் பேரவை மற்றும் அதனைச் சார்ந்த மன்றங்களின் செயல்பாடுகளை நிறுத்தி வைக்கவோ, முற்றிலுமாகக் கலைத்துவிடவோ முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

XII. கல்லூரிப் பேரவை மற்றும் இதர மன்றங்களின் உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் தங்கள் பதவியைத் தவறாகப் பயன்படுத்துதல், ஊழல் புரிதல் ஆகிய செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மேற்கண்ட உறுப்பினர், பொறுப்பாளர் பதவியிலிருந்து உடனடியாக விலக்கப்படுவர். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.

XIII. கல்லூரிப்பேரவை மற்றும் இதர மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களின் செயல்பாடுகள் மற்றும் கூற்றுகள் கல்லூரி நிர்வாகத்திற்கோ, மாணவர்களின் அமைதிக்கோ தீங்கு விளைவிக்குமாயின் அவர்கள் உறுப்பினர், பொறுப்பாளர் பதவியிலிருந்து உடனடியாக விலக்கப்படுவர். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.



XIV. கல்லூரிப்பேரவை மற்றும் இதர மன்றங்களின் உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் அரசியல் மற்றும் சாதி, சமயத்தை அடிப்படையாகக் கொண்ட இயக்கங்களில் உறுப்பினராக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது அவர்களுடைய செயல்பாடுகள் நேரடியாகவோ, மறைமுகமாவோ அரசியல் மற்றும் சாதி, சமய அமைப்புகளின் தொடர்புடையதாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலோ அவர்கள் மேற்கண்ட உறுப்பினர், பொறுப்பாளர் பதவியிலிருந்து உடனடியாக விலகக்கப்படுவர். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.

XV. கல்லூரிப்பேரவை மற்றும் இதர மன்றங்களின் உறுப்பினர்கள், பொறுப்பாளர்களின் நடத்தை கல்லூரி வளாகத்திலோ அல்லது வெளியிலோ திருப்திகரமாக இல்லை என்று கருதப்பட்டால் அவர்கள் மேற்கண்ட உறுப்பினர், பொறுப்பாளர் பதவியிலிருந்து உடனடியாக விலக்கப்படுவர். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.

XVI. பேரவை மற்றும் இதர மன்றங்களின் உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் குற்றவியல் வழக்கில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மேற்கண்ட உறுப்பினர், பொறுப்பாளர் பதவியிலிருந்து விலக்கப்படுவர். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## XI. தேர்வு நெறியாளர் அலுவலகம்

(Office of the Controller of Examinations)

1. பருவத் தேர்வு விண்ணப்பங்களைத் தேர்வு நெறியாளர் அலுவலகத்தினர். துறைத்தலைவர்கள் மூலமாக மாணவர்களுக்கு அளித்திடுவர்.

2. விண்ணப்பத்தில் மாணவரின் பெயர், தேர்வு எண் மற்ற விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. உரிய காலத்திற்குள் கல்லூரி அலுவலகத்தில் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

4. தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

### தேர்வு நுழைச் சீட்டு

1. தேர்வு தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன் தேர்வு நுழைச்சீட்டுகள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் வழங்கப்படும்.

2. மாணவர்கள் தங்களுடைய தேர்வு நுழைவுச் சீட்டையும் அடையாள அட்டையையும் தேர்வுக்குத் தவறாமல் கொண்டு வரவேண்டும்.

3. தேர்வு நுழைவுச்சீட்டின்றித் தேர்வுக்கு வரும் மாணவர்கள் தேர்வு நெறியாளர்/ தலைமைத் தேர்வு கண்காணிப்பாளரின் சிறப்பு அனுமதி பெற்ற பின்னரே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்களுக்கு ஒறுத்தல் கட்டணம் விதிக்கப்படும்.

4. தேர்வு நுழைச்சீட்டைத் தவறவிட்டவர்கள் ரூ.100 கட்டணம் செலுத்தி நகல் நுழைவுச்சீட்டு பெற்றுக் கொள்ளலாம்.



### மதிப்பெண் விபரங்கள்

**UG, PG and M.Phil., Programmes**

**Students who are admitted Upto 2018 - 2019**

| | | Maximum | | Minimum | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | அக மதிப்பீடு | புற மதிப்பீடு | அக மதிப்பீடு | புற மதிப்பீடு | |
| செய்முறைத் தேர்வுகள் | UG | 25 | 75 | 10 | 30 | 40 |
| | PG | 40 | 60 | 16 | 24 | 50* |
| எழுத்துத் தேர்வுகள் | UG | 25 | 75 | 10 | 30 | 40 |
| | PG / M.Phil., | 40 | 60 | 16 | 24 | 50* |

** Passing minimum Aggregate for **PG and M.Phil.,** Programmes (Internal + External) Should be 50 marks*

### மதிப்பெண் விபரங்கள்

**UG, PG and M.Phil., Programmes**

**Students who are admitted during 2019 - 2020 onwards**

| | | Maximum | | Minimum | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | அக மதிப்பீடு | புற மதிப்பீடு | அக மதிப்பீடு | புற மதிப்பீடு | |
| செய்முறைத் தேர்வுகள் | UG | 40 | 60 | 16 | 24 | 40 |
| | PG | 40 | 60 | 16 | 24 | 50* |
| எழுத்துத் தேர்வுகள் | UG | 25 | 75 | 10 | 30 | 40 |
| | PG / M.Phil., | 25 | 75 | 10 | 30 | 50* |

** Passing minimum Aggregate for **PG and M.Phil.,** Programmes (Internal + External) Should be 50 marks*

| அகமதிப்பீடு | | (எழுத்துத் தேர்வுகள்) | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | இளநிலை UG | அக மதிப்பீட்டுத் தேர்வு I | 10 |
| | | அக மதிப்பீட்டுத் தேர்வு II | 10 |
| | | பயிற்சிக் கட்டுரை / ஒப்படைவு (Assigament) | 5 |
| | | | 25 |
| 2. | முதுநிலை PG | அக மதிப்பீட்டுத் தேர்வு I | 10 |
| | | அக மதிப்பீட்டுத் தேர்வு II | 10 |
| | | ஒப்படைவு (Assignment) /ஆய்வுரை (Seminar) | 5 |
| | | | 25 |

**CIA Components for M.Phil., Programmes**

| | | |
|---|---|---|
| I | Best 2 tests out of 3 | 10 Marks |
| II | Attendance | 05 Marks |
| III | Seminar | 05 Marks |
| IV | Assignment | 05 Marks |
| | Total | 25 Marks |

### தேர்வு முடிவுகள்

1. தேர்வு முடிவுகள் கல்லூரிக் கையேட்டில் அறிவிக்கப்பட்ட தேதிகளில் கல்லூரி இணையதளத்திலும், கல்லூரி அறிக்கைப் பலகையிலும் வெளியிடப்படும்.

2. தேர்வு முடிவுகள் வெளியிடும் தேதி தொடர்பாகத் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் வரும் விசாரணைகள் ஏற்கப்படமாட்டாது.

3. அகமதிப்பீட்டில் தேர்ச்சி பெறாத அல்லது அகமதிப்பீட்டில் மதிப்பெண் மேம்பாடு பெற விரும்பும் மாணவர்கள் அடுத்துவரும் பருவத்தில் ரூபாய் 100/- கட்டணம் செலுத்தி மறுபடியும் அகமதிப்பீட்டுத் தேர்வு, பயிற்சிக்கட்டுரை, திருப்புத்தேர்வு ஆகியவற்றல் தேர்ச்சி பெறுவது அவசியமாகும். மேலும் தேர்வு முடிவுகள் வெளியான 10 நாட்களுக்குள் அதற்கான விண்ணப்பத்தைத் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில்



பெற்று. துறை ஆசிரியர், துறைத்தலைவர், கல்லூரி முதல்வர் ஆகியோரின் கையொப்பத்துடன் கல்லூரி அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

### துணைத்தேர்வுகள்

துணைத் தேர்வுகள் ஆகஸ்ட் / பிப்ரவரி மாதங்களில் நடைபெறும். கல்லூரிக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி துணைத் தேர்வுகள் நடத்தப்பெற்றுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்.

## தேர்வுக் கட்டணம் செலுத்துதல்

### தனித்தேர்வர்கள் (Privale Candidates)

நவம்பர் மற்றும் ஏப்ரல் மாதத் தேர்வுகளுக்குப் பதிவு செய்தல் பற்றிய விபரங்கள் தனித் தேர்வர்களுக்காக இணையதளத்தில் வெளியிடப்படும் இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும் கீழ்க்கண்ட தேதிகளில் தனித்தேர்வர்கள், தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் பெற்று உரிய கட்டணத்தை கல்லூரி அலுவலகத்தில் செலுத்தித் தேர்வுக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

| பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் எம்ஃபில் | |
|---|---|
| நவம்பர் / டிசம்பர் தேர்வுகள் | செப்டம்பர் 01 முதல் 30 வரை |
| ஏப்ரல் / மே தேர்வுகள் | பிப்ரவரி 01 முதல் 28 வரை |

### தேர்வு அறை விதிமுறைகள்

தேர்வு எழுத வரும் மாணவர் தேர்வுறை அனுமதிச்சீட்டு (Hall Ticket) அடையாள அட்டை (Identity Card) ஆகியவற்றைக் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும். அடையாள அட்டையும், தேர்வறை அனுமதிச்சீட்டும் இவை இரண்டுமோ அல்லது இரண்டில் ஏதேனும் ஒன்றோ கொண்டு வராத மாணவர்கள் தேர்வு எழுதக் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தவறவிட்ட மாணவர்கள் முதல்வரைச்

சந்தித்து தகுந்த காரணம் தெரிவித்து தற்காலிக அடையாளக் கடிதமும், தேர்வறை அனுமதிச்சீட்டும் பெற்றபின் அந்தக் குறிப்பிட்ட தேர்வுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர். நிரந்தரமான அடையாள அட்டையும் தேர்வறை அனுமதிச்சீட்டும் பெற்றபின்னரே அடுத்த தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். மாணவர்கள் கூறும் காரணங்கள் முதல்வருக்குத் திருப்தி அளித்தால் மட்டுமே மேற்கண்ட அடையாளக் கடிதமும் தேர்வறை அனுமதிச்சீட்டும் மாணவர்களுக்கு வழங்கப்படும். தேர்வு அறைகளில் கணித அளவைப் பட்டியல் தவிர, புத்தகம் போன்ற பொருட்கள் அனுமதிக்கப்படமாட்டது. கூடுதல் விடைத்தாள்கள் தேவைப்பட்டால் மாணவர்கள் இருக்கையிலிருந்து எழுந்து நின்று மேற்பார்வையாளரின் கவனத்தை ஈர்க்க வேண்டும். தேர்வு நடைபெறும் பொழுது மாணவர்கள் எழுதுகோல் முதலான துணைக்கருவிகள் எதுவும் இரவல் வாங்க, கொடுக்க அனுமதிக்கப் படமாட்டாது. தேர்வு அறைக்குள் புத்தகத்தையோ அல்லது அதன் பகுதியையோ தன் வசம் வைத்திருத்தல், கையால் எழுதப்பெற்ற காகிதம் அல்லது உருமாற்றி அமைக்கப்பட்ட தாள் வைத்திருத்தல், மற்ற மாணவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்தல், பிற மாணவர்களின் விடைத் தாள்களைப் பார்த்து எழுதுதல், வினாத்தாள்களில் விடைக் குறிப்புகளை எழுதுதல், தேர்வு அறைக்கு வெளியே தொடர்பு கொள்ளுதல் போன்ற அனைத்துச் செயல்களும் தேர்வு நெறிமுறைகளுக்கு எதிராகக் கருதப்படும். தேர்வு நெறிகளை மீறும் மாணவர்கள் உடனே அறையை விட்டு வெளியேற்றப் படுவார்கள். இது தொடர்பான விரிவான அறிக்கையும், குற்றம் கண்டு பிடிக்கப்பட்ட மாணவரின் விடைத்தாள் மற்றும் ஆதாரப் பொருட்கள் அடங்கிய தொகுப்பும் உடனடியாகக் கல்லூரி முதல்வருக்கு அனுப்பப்படும். குற்றம் செய்த மாணவர்கள் தொடர்ந்து வரும் தேர்வுகளை எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.



### நிலைச் சான்றிதழ்கள்

ஏப்ரல் மாதத் தேர்வு முடிவுகள் வெளியான பின் ஒவ்வொரு துறைக்கும் U.G. மற்றும் P.G. யில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர்கள் பட்டியல் அனுப்பப்படும். அப்பட்டியலின் படி தகுதியுள்ள மாணவர்கள் Certificate-க்கு தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் இருந்து பட்டமளிப்பு விழாவின் பொழுது வழங்கப்படும்.

## XII. மாணவ / மாணவியர்களுக்கான விடுதிகள்

### ஆடவர் விடுதிகள்

கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் தங்கிப் பயில்வதற்காக மகாத்மா காந்தி நூற்றாண்டு விடுதி **(M.G.C. Hostel)** மற்றும் மேட்டுநில விடுதி **(Highland Hostel)** ஆகிய இரண்டு விடுதிகள் உள்ளன. இந்த இரண்டு விடுதிகளிலும் 500 மாணவர்கள் தங்கிப் பயிலலாம். மாணவர்களுக்கு உள்ளரங்க விளையாட்டு மற்றும் தொலைக்காட்சி வசதிகள் உள்ளன.

### மகளிர் விடுதிகள்

**CVR Hostel** மற்றும் **U.G.C. Hostel** என்ற பெயரில் 1600 மாணவிகள் தங்கும் வசதியுடன் விடுதிகள் இயங்கி வருகின்றன. மாணவிகளுக்கு உள்ளரங்க விளையாட்டு மற்றும் தொலைக்காட்சி, படிப்பகம், இண்டர்நெட் முதலிய வசதிகள் உள்ளன.

## XIII. மாணவர்களுக்கான பிற அமைப்புகள்

### 1. தேசிய மாணவர் படை (இராணுவம்)

ஒரு அதிகாரி மற்றும் 90 மாணவர்களைக் கொண்ட தரைப்படைப் பிரிவு நமது கல்லூரியில் 1952ம் ஆண்டு தொடங்கப்பட்ட 2 தமிழ்நாடு பேரணி என்.சி.சி.யின் கீழ் இயங்கி வருகிறது.

### 2. நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)

நம் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) செயல்பட்டு வருகிறது. இதில் நான்கு அணிகள் உள்ளன. ஒவ்வொராண்டும் இத்திட்டத்தில் 500 மாணவத் தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

### 3. ரோட்டராக்ட் சங்கம் (Rotaract Club)

மாணவர்களிடையே தலைமைப்பண்பு, சேவை மனப்பான்மை, நன்னடத்தை ஆகியவற்றை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட இச்சங்கம் கல்லூரியிலும் கல்லூரிக்கு வெளியிலும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. ஆண்டு தோறும் 100 மாணவர்கள் சங்க உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

### 4. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் (Junior Red Cross)

செஞ்சிலுவைச் சங்கம், மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுநிலைமை, தனித்துவம், தன்னலமற்ற சேவை, ஒருமைப்பாடு, உலகளாவிய தன்மை ஆகிய கொள்கைகளைக் கொண்டது. இளம் நெஞ்சங்களில் சேவை உணர்வினை வளர்த்து எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களை உருவாக்க வேண்டும் என்ற



நோக்கத்தில் கல்லூரிகளில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க அமைப்புகள் தொடங்கப்படும். நலவாழ்வு, நோய்த்தடுப்பு, துயர் துடைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் செயல் திட்டங்களைக் கொண்டு இயங்குகிறது. ஆண்டுதோறும் 100 மாணவர்கள் சங்க உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

## XIV. தர உத்திரவாத உள்ளமைப்பு (IQAC)

தேசிய தர ஆய்வு மற்றும் அங்கீகாரக் குழு அறிவுறுத்தலின் படி இத்தர உத்தரவாதக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உயர்கல்வி, கல்வி சார்ந்த ஆளுமை மற்றும் சேவைப்பணிகள், மாணவர் எதிர்கால நலன் குறித்த ஆலோசனை, ஆசிரியர் - மாணவர் திறன் மதிப்பிடுதல், கல்லூரி வளாக மேம்பாடு, சமூக விழிப்புணர்வு, கல்வி தொழில் நிறுவனங்கள் ஒப்பந்தம் மூலம் அனுபவக்கல்வி வாய்ப்பு ஆகிய பல அம்சங்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும்.

### பிற வசதிகள்

கல்லூரி வளாகத்தில் சிண்டிகேட் வங்கி ATM மற்றும் சிற்றுண்டிச் சாலையும் உள்ளன.



| எண். | தேர்வு எழுதும் மாணவர்கள் செய்யும் முறைகேடுகளும் |
|---|---|
| 1. | தேர்வு சம்பந்தமான விடைகளைத் துண்டுச் சீட்டில் எழுதி வைத்திருத்தல் |
| 2. | அருகில் அமர்ந்திருக்கும் மாணவர்களைப் பார்த்து எழுதுதல் அல்லது விடைத் தாளை மாற்றிகொள்ளுதல் அல்லது துண்டுச் சீட்டில் உள்ள பதில்களைப் பயன்படுத்தி எழுதுதல் இது போன்ற தவறுகள் செய்ததை விசாரணையின் போது ஒத்துக்கொண்டால். |
| 3. | தேர்வு எழுதிய அறையில் தவறை ஒத்துக்கொள்ளாமல் விசாரணையின் போது தவறை ஒத்துக்கொள்ளுதல். |
| 4. | தேர்வு எழுதிய அறையில் மற்றும் விசாரணையின் போது தவறை ஒத்து கொள்ளாமல் இருப்பது. |
| 5. | தேர்வு அறைக் கண்காணிப்பாளரிடம் அல்லது தேர்வு நடத்தும் அலுவலர்களிடம் மரியாதை இன்மையுடன் நடந்து கொள்ளுதல். |
| 6. | தேர்வு அறைக் கண்காணிப்பாளரிடம் அல்லது தேர்வு நடத்தும் அலுவலர்களைத் தாக்குதல். |
| 7. | தேர்வுவிடைத்தாளைத் தேர்வு அறைக்கு வெளியே எழுதி எடுத்து வருதல் / தேர்வு விடைத்தாளை வெளியில் இருந்து எழுதித் தேர்வு அறைக்குக் கொண்டு வந்ததாகக் கண்காணிப்பாளர் புகார் செய்தால். |



| எண். | அதற்கான தண்டனைகளும் |
|---|---|
| 1. | அப்பருவத்தின் (Semester) அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். |
| 2. | அப்பருவத்தின் (Semester) அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும் மற்றும் அடுத்து நடைபெறவுள்ள ஒன்று / இரண்டு பருவத் தேர்வுகள் (Semester) எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். |
| 3. | அப்பருவத்தின் (Semester) அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும் மற்றும் அடுத்து நடைபெறவுள்ள ஒன்று / இரண்டு பருவ தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். (அல்லது) கல்லூரி யிலிருந்து இரண்டு பருவத்திற்கு (Semester) இடைநீக்கம் செய்தல். |
| 4. | அப்பருவத்தின் அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். மேலும் அடுத்து வரும் மூன்று பருவத்தேர்வுகள் எழுத அனுமதிக்க மாட்டார்கள். (அல்லது) கல்லூரியிலிருந்து இரண்டு பருவத்திற்கு இடைநீக்கம் செய்தல். |
| 5. | அப்பருவத்தின் அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். மேலும் அடுத்து வரும் மூன்று பருவத்தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். (அல்லது) கல்லூரியிலிருந்து இரண்டு பருவத்திற்கு இடைநீக்கம் செய்தல். |
| 6. | அப்பருவத்தின் அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். மற்றும் அடுத்து மூன்று வருடங்களுக்கு தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். |
| 7. | அப்பருவத்தின் அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். மேலும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். |

| எண். | தேர்வு எழுதும் மாணவர்கள் செய்யும் முறைகேடுகளும் |
|---|---|
| 8. | அடுத்தவரைப் பார்த்து எழுதும் போது பிடிபட்டு மாணவன் விடைத்தாளைக் கொடுக்க மறுத்தாலோ / விடைத்தாள் உடன் தேர்வு அறையில் இருந்து ஓட முயற்சித்தாலோ/ அல்லது விடைத்தாளை அழிக்க முற்பட்டாலோ மற்றும் தடயங்களை அழிக்க முற்படுதல். |
| 9. | ஆள் மாறாட்டம் செய்தல். |
| 10. | வண்ணக்காகித பென்சில்களைப் பயன்படுத்துதல் / தேர்வு எழுதுபவர் பெயர் மற்றும் பதிவு எண் / கல்லூரியின் பெயர் போன்ற விபரங்களை விடைத்தாளில் மற்ற இடங்களில் எழுதித் தங்களைக் கண்டறிய முயற்சித்தல். |
| 11. | விடைத்தாள் திருத்துபவர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி செய்தல் / கடிதம் மூலமாக பணமோ வேறு உதவிகளோ செய்ய முயற்சித்தால். |
| 12. | வேண்டுமென்றே பதிவு எண்ணை மாற்றி எழுதுதல். |
| 13. | தவறான தேர்வு அறை அனுமதிச்சீட்டு மற்றும் சான்றுகளை சமர்ப்பிப்பது / தேர்வு அறை அனுமதிச் சீட்டில் மற்றும் சான்றிதழ்களில் திருத்தம் செய்தல். |
| 14. | அகமதிப்பீட்டுத் தேர்வு எழுதும் பொழுது முறைகேட்டில் ஈடுபட்டால் |
| 15. | ஒப்படைப்பு, திட்டக்கட்டுரை, ஆய்வு ஏடு (Thesis) / பயிற்சிக்கட்டுரை (Assignment) ஆகியவற்றைப் பிறரிடம் இருந்து கருத்துத் திருட்டு (Plagiarism) செய்திருந்தால் |



| எண். | அதற்கான தண்டனைகளும் |
|---|---|
| 8. | அப்பருவத்தின் அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். |
| 9. | அவரது அந்தப் பருவத் தேர்வுகள் அனைத்தும் ரத்து செய்யப்படும். அடுத்து வரும் ஐந்து பருவத் தேர்வுகள் அல்லது மூன்று வருடம் தேர்வு எழுத அனுமதிக்கப் படமாட்டார்கள். ஆள் மாறாட்டம் செய்தவர்கள் நம் கல்லூரியில் படிக்க கூடிய மாணவர்களாக இருந்தால் மேல் குறிப்பிட்ட தண்டனை வழங்கப்படும் / வெளிநபராக இருந்தால் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் படிக்கும் கல்லூரிக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும். |
| 10. | அப்பருவத்தின் அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். |
| 11. | அப்பருவத்தின் அவரது அனைத்துத் தேர்வுகளும் ரத்து செய்யப்படும். மேலும் அடுத்துவரும் இரண்டு பருவத் தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். |
| 12. | அப்பருவத்தில் அவர் எழுதிய அனைத்து தேர்வுகளும் ரத்து செய்யப்படும். |
| 13. | இந்தக் குற்றம் செய்த மாணவர்கள் குற்றம் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு அடுத்து வரும் இரண்டு ஆண்டு களுக்குத் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். |
| 14. | அப்பருவத்தின் அவரது அனைத்து அகமதிப்பீட்டுத் தேர்வுகளும் ரத்து செய்யப்பட்டு அப்பருவத்தின் இறுதித் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். |
| 15. | உண்மை என நிரூபிக்கப்பட்டால் மதிப்பெண்கள் வழங்கப் பட மாட்டாது. |

தேர்வு நெறியாளர் முதல்வர்

குறிப்புகள் :



குறிப்புகள் :